உ
சிவமயம்




இருபாலையைப் பிறப்பிடமாகவும், தொல்புரம் வழங்கம்பரை அம்பாள் ஆலய அரங்கை நீண்ட நெடிய காலமாக வாழ்விடமாக வரித்துக்கொண்டவரும் அமரர் சுப்பிரமணியம் ஐயா அவர்களின் வாழ்க்கைத் துணைவியுமாகிய

# அமரர்
# அன்னபூரணம் அவர்களின்
## சிவபதப்பேறு குறித்த
# நினைவு மலர்

31.05.2005

# சமர்ப்பணம்



திரி ஒன்று எரிந்தது ஒளி தந்து மறைந்தது
பூ ஒன்று உதிர்ந்தது ; காய் ; கனியாய் மலர்ந்தது
அம்மா என்ற உறவே, தலைவி என்ற வழி விளக்கே
சாம்பரிலும் சாகாத பசுமை நீர் எமக்கு;
கடலில் கரைத்தாலும் கரையுமா உறவு? எண்ண
அலைகளில் எப்போதும் எங்களம்மா!
வேலியாக இருந்தீர் ஏணியாக உயர்ந்தோம்
மலர்பறிக்க நினைத்தோம் அம்மா! முள்ளுக்குத்தியது ;
யாழ் ஓசையில் தேனின் சங்கீதமாம். இது தான் விதி
சமாதி இல்லாத சாம்ராச்யமே! நீங்கள் எங்கள்
சந்நிதி, அதற்கு அர்ப்பணிக்கின்றோம்
இம்மலர்கள் சமர்ப்பணம்.

குடும்பத்தினர்

உ

சிவமயம்



அமரர்

# திருமதி சுப்பிரமணியம் ஐயா அன்னபூரணம்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

31-05-2005

உ

சிவமயம்

திரியாய் எழுந்து

07 * 05 * 1908



மலராய் உதிர்ந்து

16 * 05 * 2005

அமரர்

## திருமதி சுப்பிரமணியம் ஐயா அன்னபூரணம்

அவர்கள்

## திதி வெண்பா

பார்த்திப வருஷம் அட்டமி பூர்வபக்க
வைகாசி சேர் மகம் திதி நாளில்
தீதறியா அன்னபூரணம்
சிவபாதத்துள் சோதி எனச் சேர்ந்தார் சொல்.

உ
சிவமயம்



## விநாயகர் வணக்கம்

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாளத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

## பஞ்சபுராணம்

### தேவாரம்

பொன்னு மெய்ப்பொரு ளும்தரு வானைப்
போக மும்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை யென்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மைய னென்றறி யொண்ணா
எம்மா னையெளி வந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
யாரூ ரானை மறக்கலு மாமே.

## திருவாசகம்

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம
எனப் பெற்றேன்
தேனாய்இன் னமுதமுமாய்த் தித்திக்குஞ்
சிவ பெருமான்
தானேவந் தென்உள்ளம் புகுந்தடியேற்
கருள் செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே
வெறுத்திட வே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமாகடலை
மற்றவரறியா மாணிக்கமலையை
மதிப்பவர்மன மணிவிளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழிமிழலை விற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லைவளர்க நம்பத்தர்கள்
வஞ்சகர் போயகல
பொன்னின் செய்மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாளுமை கோனடியோ
முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

அலகிலாக் கணையென்று மந்தளிரீன்று தொல்லை
உலகெலாம்பூத்துக் கங்கையுவட்டெடுத் தொழுகுஞ் சென்னி
மலையினிற் படர்ந்த பச்சை மரகதக் கொடியை ஞானக்
கலையமுதொழுகு தீஞ்சொற்கனியினைக் கருத்துள் வைப்பாம்.

## திருப்புகழ்

எதிரிலாத பத்தி தனைமேவி
இனியதானினைப்பை யிருபோதும்
இதய வாரிதிக்கு ளுறவாகி
எனதுளேசிறக்க அருள்வாயே
கதிர்காம வெற்பி லுறைவோனே
கனகமேருவொத்த புயவீரா
மதுரவாணி யுற்ற கழலோனே
வழுதிகூனிமிர்த்த பெருமாளே.

**கேடும் பெருக்கமும் இல்அல்ல நெஞ்சகத்துக்**
**கோடாமை சான்றோர்க் கணி.**

**சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா**
**உட்கோட்டம் இன்மை பெறின்**

- திருக்குறள்

உ
திருச்சிற்றம்பலம்

# வழக்கம்பரை மாரியம்மன்

# திருவூஞ்சல்

## காப்பு

**இராகம்: பைரவி**

*சீர்மேவுந் தொண்டைநத்துத் திகழ்ந்து மேவுஞ்*
*செய்யவளஞ் செறிவழக்கம் பரையில் வாழும்*
*ஏர்மேவும் மகாமாரி யம்மை மீதே*
*இசைபூத்த செந்தமிழா லூஞ்ச லோதத்*
*தார்மேவுஞ் சடைமவுலி யரனார் தந்த*
*தனிமகவாம் பெருமுதன்மை சார நின்ற*
*கார்மேவுங் கரிமுகவன் றனது பாதங்*
*கரம்பூத்த மலர்கொண்டே கருதி வாழ்வாம்.*

## உ. ஊஞ்சற் சிறப்பு

*பூவாரு நீலமணித் தம்ப நாட்டிப்*
*பொலியுமொளிர் வச்சிரத்தால் விட்டமாட்டிக்*
*காவாரு பதுமணிக் கயிறு பூட்டிக்*
*கருதரிய பவளமணிப் பலகை கூட்டி*
*மாவாரச் செய்தருளு மூஞ்சல் மீது*
*மலர்மகளுங் கலைமகளும் வடந்தொட் டாட்ட*
*நாவாரும் வயல்வழக்கம் பரையில் வாழு*
*நாயகியே மாரியம்மே யாடீ ருஞ்சல்.*

## 3. புர்வோற்பத்திச் சிறப்பு

முந்தொருநா ளுமையவளுந் தவத்தை யாற்ற
முனியெனச்சென் றரனவடன் முத்தை யீர்ப்ப
எந்தைசிறு விரலிலெழு முத்துத் தோற்ற
இயலான்போற் சீதளா யென்றே கூவ
வந்தருளிக் கன்னனூர் மாரி யாகி
வளமைசெறி வையகத்தார் வழிபட் டேத்த
நந்துதவழ் வயல்வழக்கம் பரையில் வாழு
நாயகியே மாரியம்மே யாடீ ருஞ்சல்.

## 4. வாச்சியச் சிறப்பு

கொம்பினொடு துடிமுரசு முழவ மேங்கக்
கொடி குடைக ளாலவட்டங் குழுமி யோங்கத்
தும்புருநா ரதர்வேத கீதம் பாடத்
தொண்டரக மகிழ்ந்துசுக வாழ்வு கூட
வம்பவிழு மலர்மாரி யமரர்பெய்ய
வரமுனிவ ரடிபரவி யாசி செய்ய
நம்புவயல் சூழ்வழக்கம் பரையில் வாழு
நாயகியே மாரியம்மே யாடீ ருஞ்சல்.

## 5. வழிபாட்டுச் சிறப்பு

உவகையொடு மலரயன்மால் கரங்கள் கூப்ப
ஓசைமணி வாயிலட்ட பாலர் காப்பத்
தவமுடையோர் தூபமுடன் றீபங் காட்டத்
தாழ்ந்துகண நாதர்புகழ் மாலை சூட்டக்
கவிகை யொடு கொடிநிரைகள் வானந்தூர்ப்பக்
காரணியென் றடியர்பல ரழுதே யார்ப்ப
நவையொழிசீர் வயல்வழக்கம் பரையில் வாழு
நாயகியே மாரியம்மே யாடீ ருஞ்சல்.

## 6. உபசாரச் சிறப்பு

அன்னநடை யயிராணி கவிகை வாங்க
அம்பைநிகர் விழியரம்பை களாசி தாங்க
வன்னமுலை யுருவசிவெண் சவரி வீச
விரிவிழியாள் திலோத்தமைவண் சிவிறிதூர்ப்ப
மின்னிடைசேர் மேனகைநல் லடைக்காய் நல்க
வியந்துபல நடமாதர் புகழ்ந்தே யாட
நன்னெல்செறி வயல்வழக்கம் பரையில் வாழு
நாயகியே மாரியம்மே யாடீ ரூஞ்சல்.

## 7. ஆபரணச் சிறப்பு

கோலமுறு வயிரமணிச் சுட்டியாடக்
குலவுமெழின் மாணிக்கத் தோடு மாட
வாலியமுத் தாரமொடு மதாணி யாட
வயங்குவளை தொடியுடனே யகங்கை யாடச்
சாலவொளிர் பாடகமுஞ் சிலம்பு மாடத்
தண்டையொடு பாதசரந் தயங்கி யாட
ஞாலமெலாம் புகழ்வழக்கம் பரையில் வாழு
நாயகியே மாரியம்மே யாடீ ரூஞ்சல்.

## 8. நடனச் சிறப்பு

முந்துதவ மாதர்துதி முழக்கி யாட
முகமனொடு புனன்மாதர் முன்னின் றாட
வந்தனையோ டுரகமட மாத ராட
வரையிலுறை மாதரடி வழிபட் டாடக்
கந்தருவ மாதரிசை காட்டி யாடக்
கருதரிய புவிமாதர் களிகொண் டாட
நந்துதவழ் வயல்வழக்கம் பரையில் வாழு
நாயகியே மாரியம்மே யாடீ ரூஞ்சல்.

## 9. திருநாமச் சிறப்பு

ஆரணியே யம்பிகையே யாடீ ரூஞ்சல்
அந்தரியே யாமளையே யாடீ ரூஞ்சல்
பூரணியே புராதனியே யாடீ ரூஞ்சல்
புங்கவியே புராந்தகியே யாடீ ரூஞ்சல்
காரணியே நாரணியே யாடீ ரூஞ்சல்
கருதரிய பலவுயிர்க்குங் காட்சி யாக
நாரநிறை வயல்வழக்கம் பரையில் வாழு
நாயகியே மாரியம்மே யாடீ ரூஞ்சல்.

## 10. போற்றிச் சிறப்பு

கனியொழுகு மாரமுதே தேனே போற்றி
கருதுமற மெண்ணான்குங் காத்தாய் போற்றி
தனிமுதலாம் பரமனிடத் தவளே போற்றி
தையல்முத்து மாரியென்னுந் தாயே போற்றி
இனிமைமிகு மீஸ்வரியே யிறைவி போற்றி
இசைபுலமை யீந்தேயென் னிதய மேவி
நனிவளஞ்சேர் வயல்வழக்கம் பரையில் வாழு
நாயகியே மாரியம்மே யாடீ ரூஞ்சல்

## 11. வாழி.

ஆவாழி மறைவாழ் மறையோர் வாழி
அரசரெழில் வணிகர்வே ளாளர் வாழி
மாவாழு முகில்வாழி முனிவர் வாழி
மனுநீதி யுலகமெலாம் மலிந்து வாழி
சீர்வாழுஞ் சித்தாந்த சைவம் வாழி
சிவனடியார் பூதிமணி யெழுத்தும் வாழி
தார்வாழு மம்மைதிரு வருளும் வாழி
தகைமைசேர் வயல்வழக்கம் பறையும் வாழி.

உ
கணபதி துணை

# எச்சரிக்கை

இராகம்: கண்டா

திருவார் தொல்புரநகரிலுறைதேவீஎச்சரீக்கை
திகழும்வயல்வழக்கம்பரையாவீ எச்சரீக்கை.

பக்தர்தொழுமாரீசிவபரையே எச்சரீக்கை
பரமன்றிருத்தேவியென்னும்வீரீ எச்சரீக்கை.

நன்னெல்வயல்வழக்கம்பரைநாரீஎச்சரீக்கை
நளினமலராசிதொழுநங்காய் எச்சரீக்கை.

கன்னன் புரவாசிகௌமாரிஎச்சரீக்கை
கந்தன்றனைத்தந்தாய்கல்யாணீஎச்சரீக்கை

## எச்சரிக்கை

இராகம்: சாவேரி

சீரார்புகழ்வழக்கம்பரைத்தேவீஎச்சரீக்கை
சிறப்பாயுயிர்செறிந்தேயருள் ஆவீஎச்சரீக்கை.

காரார் குழற்கௌரீகௌமாரீஎச்சரீக்கை
கற்றோர் புகழ்வீரியலங்காரீஎச்சரீக்கை.

பச்சைப்படிவத்தீபராசத்தீஎச்சரீக்கை
பாவிக்கருள்புரிவாய்பரமேட்டீஎச்சரீக்கை.

ஆனித்திருவுலாவில் வருமம்மே எச்சரீக்கை
அடியார்வினையகலவருமமலைஎச்சரீக்கை.

## எச்சரிக்கையும் – பராக்கும்

இவை ஷை உபாத்தியாயரது மாதுருவழியில் பாட்டனா ராகிய ஸ்ரீ. அ.வேலாயுதச்சட்டம்பியார் முன்செய்தது.

திருவார் தருமிமையாசலமலைமேல்வள ருமையே
சிறிமாமுத்துமாரீயென்னுந்தேவீஎச்சரிக்கை
முருகார்மலர்மகள்நாமகள்முதலாமரமகளீர்
முறையாயடிவணங்குமுத்துமாரீஎச்சரீக்கை.
தளக்கும்புகழுழக்கும்வயல்வழக்கம்பரையுறையும்
தையல்முத்துமாரியென்னுந்தாயேஎச்சரீக்கை.

### பராக்கு

**இராகம்: பந்துவராளி.**

முச்சகமும்போற்றுமுத்துமாரீஇபராக்கு
மூவுலகையாளுமுத்துமாரீஇபராக்கு
இச்சமும்பரவுமுத்துமாரீஇபராக்கு
இமயமலையரசன்பெற்றகுமரீஇபராக்கு

### பராக்கு

**இராகம்: பந்துவராளி.**

உலகுபுகழ்வழக்கம்பரையுறைவாய்பராக்கு
உத்தமர்களுளத்திலருள்நிறைவாய்பராக்கு
பலகலையுமேத்தும்பராபரையேபராக்கு
பணிந்தவருக்கருளடித்தாமரையேபராக்கு
கச்சைக்கிழித்தெழுந்தகனதனத்தீபராக்கு
கரியையடர்த்திடுமரிவாகனத்தீபராக்கு.

## லாலி

**இராகம்: பூரணசந்திரிகை.**

திருவாணியுங்கவரிபோடத்தேவமாதராடத்
திகழுங்கந்திருவர்பாடச்செழித்தருளுந்தேவி லாலி லாலி.

வருமலர்கள்சூடிவளர்மாரியேகௌமாரி
வானவர்கள்வணங்கிப்போற்றமகிழ்ந்தருளு தாரி
லாலி லாலி

கன்னல்வயல்வழக்கம்பரைகாரணிபுராணி
காசினியோர்வினைதீர்த்துக்கருணை செய்கல் யாணி
லாலி லாலி.

## லாலி

**இராகம்: ஸ்ரீராகம்.**

லாலிலாலி லாலி லாலிலாலி - லாலி
லாலிலாலி லாலி லாலிலாலி.

மாரிலாலி கௌமாரிலாலி - மக
மாரிலாலி முத்துமாரிலாலி லாலி லாலி.
ஆனிமாதத் திரு நாள்விழாவில் - உயர்
தேரில்வந்து எமை யாளுமம்மே லாலி லாலி.
நந்நெல் வயல் வழக் கம்பரையில் - மேவி
இந்நிலத்தோர்க் கருள் செய்யுமாரி லாலி லாலி.
எத்திசையும் புகழ் சத்திமுத்தி நிதம்
பத்திசெய்தே னருள் புத்திதாரும் லாலி லாலி.

## மங்களம்

இராகம்: ஆனந்தபைரவி.

மங்களம்மங்களப்பாட்டைநானுரைக்கவே
வாக்கில்வந்துமாரியம்மேகாத்துமுன்நிற்கவே
சங்குநெறி வயல்வழக்கம் பரையில்வந்ததாயே
சரமசரமானவுயிர் தந்தருளுமாயே - மங்.
சிங்கவாகனத்திலேறுஞ்சீதளையேதேவி
செங்கரகம் வாளுடுக்கை செய்யபையபாணீ.
ஆரணியே பூரணியே யாமளையே யம்மே
அடியவர்கள் வினையகற்றி யாளுமுத்து மாரீ.

## கப்பற் பாட்டு

ராகம்: புன்னாகவராளி.

கொங்குலவுமலர்வாவி
குளிர்ந்திலங்குந்தொல் புரத்துச்
சங்கை செறிவயல்வழக்கம்
பரையதனிலருள் பொழியு
மிங்கிதமார் மாரிதன்மே
லினியகப்பலேற்றியிங்கே
மங்கலமார் மகிமையுடன்
வந்திறங்குஞ்சரக்குவகை.

குங்குமம்பூமிளகுகராம்புசாதிக்காய்
கோரோசனைபுனுகுபன்னீர்கதம்பம்
கொச்சிமஞ்சலாம்பிச்சைவேர்வகையுடனே
வங்காளமஞ்சலுமதிமதுர கோட்டம்
மட்டிப்பால்சாம்பிராணிகட்டிக்கற்பூரம்
மடமஞ்சல்சடமஞ்சல்செம்மஞ்சலிஞ்சி
மணமுள்ளபூராக்கிழங்குதற்கோலம்

வயிரக்கட்டி குங்குமத்திருநாமக்கட்டி
கோதம்பைகடலைபனைவெல்லஞ்சீனி
கோதையுடன்கஸ்தூரியீரப்பலாக்கொட்டை
வெண்கலந்தானமாப்பித்தளைதிராபம்
வெள்ளிப்பூங்கட்டி வெள்ளிவஸ்திரக்கட்டி
பொன்னுடன்தங்கமமேலானமதுரம்
பூவந்திக்கட்டி நேர்வாளமுப்பு
பொன்னரிதாரங்கிருஷ்ணாசலப்பட்டை
புலித்தோலுமாகாசக்கருடக்கிழங்கு
சரக்குநெல் பாக்குடன் சாதி லிங்கக்குக்கில்
கொம்புடன் தந்தமுங்கோட்டமயமீயம்
எங்கெங்குந்தீவாந்தரத்திலுண்டான
குங்குமப்பூக்கஸ்தூரிகோரோசனைகள்
குமுகுமென்றுவாசிக்கும் பச்சைக்கற்பூரம்
சந்தனத்தயிலங்கள்சாதிக்காயத்தர்
சலசலென்றுவாசிக்குஞ்சால் வையுறு மால்கள்
கட்டிக்கற்பூரங்குட்டிக்குங்கிலியம்
செத்தவரைப்பிழைப்பிக்குஞ்சீவிமருந்து
வெட்டுண்டகாயங்களொட்டநல்லமருந்து
வாழாதபெண்களுக்குவாழ்வுதருமருந்து
மைந்தரில்லாமலடிக்குப்பிள்ளைதருமருந்து
கூடாதவாணும்பெண்ணுங்கூட்டிவைக்குமருந்து
தேசாந்திரஞ்சென்றுதிசை கெட்டபேரைச்
சீக்கிரமாய்க் கொண்டுவந்து சேர்க்குநல்மருந்து
இந்தவகையான பலமருந்துகளுமாக
அரக்குமுதலானபலசரக்குகளுமேற்றி
அஞ்சாதசிங்கக்கொடிகட்டிக்கொண்டு
மாமாரிமகமாரிகௌமாரியருளால்
மகிமைபெறுகப்பல்மிகுசிந்தாத்திரையாக
வந்துதடாகரைதனிலே
ஆகா!கரைதனிலே வந்துதடா
ஆடிக்கோ பாடிக்கோ தேடிக்கோ சுகங்கூடிக்கோ.

திருச்சிற்றம்பலம்.

அமரர் சுப்பிரமணியம் அன்னபூரணம்

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

உதயம்:–

எங்கள் அம்மா அவர்கள் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் பழம்பெரும் புனித ஸ்தானமாகிய கீரிமலையைச் சேர்ந்த செல்லர் ஐயா என்றழைக்கப்படும் முத்துச்சாமி ஐயா - கனகம்மா அவர்களின் ஏகபுத்திரியாவார். மீனாட்சிசுந்தரம், சாட்சிநாதன் ஆகிய சகோதரர்களுக்கு செல்வ சகோதரியாக அவதரித்தார்.

இளமைப்பருவம்:–

இவர், ஆரம்பக்கல்வியை பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலையிற் பயிற்றார். மங்கைப் பருவம் அடைந்ததும் இவரது தந்தையார் தனது மகளுக்கு ஏற்ற வரனைத் தேடினார்.

இல்வாழ்க்கை:–

அன்னபூரணம் அம்மா அமரர் சுப்பிரமணிய ஐயாவை திருமணம் செய்தார். சுப்பிரமணிய ஐயா வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் பூசகராவார். இவர்களின் வாழ்வு சிறப்புற்றிருக்கையில் மக்கட் செல்வங்களாக வேதரெத்தினம், தங்கரெத்தினம், முத்துக் குமாரசாமி,நாகரெத்தினம் சுந்தரராஜா, இராஜரெத்தினம், திருஞான சம்பந்தன், லோகநாயகி ஆகியோரைப் பெற்றெடுத்து சகல சௌபாக்கியங்களோடும் சீரும் சிறப்புமாக வாழ்ந்தார்.

அன்னபூரணத்தின் சகோதரன் அமரத்துவம் அடைந்த மீனாட்சிசுந்தரத்தின் ஏக புத்திரி மகேஸ்வரி (கிளி) யை பெற்றோர் காலஞ்சென்றமையால் தனது பிள்ளைகளோடு சேர்த்து வளர்த்து வந்தார்.

மக்கட் செல்வம்:-

சிரேஷ்ட புத்திரியான வேதரெத்தினம் (பெரியபிள்ளை) அவர்கள் ஐயாவின் சகோதரியின் புத்திரனான திரு. இரத்தினசபாபதி கெங்காதரனும் (வர்த்தகர்) அவர்களை திருமணம் செய்து சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருகின்றார். இவர்களுக்கு ஆறு ஆண் பிள்ளைகளும், மூன்று பெண் பிள்ளைகளுமாக பேரப்பிள்ளைகள் பூட்டப் பிள்ளைகளைக் கண்டு மகிழ்ந்தார்.

அமரத்துவம் அடைந்த இரண்டாவது புத்திரி தங்கரெத்தினம் (தங்கம்) புற்றடியைச் சேர்ந்த அமிர்தலிங்கம் இராமசிவம் ( சுங்க இலாகா மதிப்பீட்டாளர்) அவர்களைத் திருமணம் செய்து சீரும் சிறப்புமாக கொழும்பில் வாழ்ந்து வந்தனர். இவர்களுக்கு நான்கு ஆண்களும் இரண்டு பெண்களும் பிறந்து பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளைக் கண்டு மகிழ்ந்தார்.

சிரேஷ்ட புத்திரன் முத்துக்குமாரசாமி (அப்பர்) மின் தொழில்நுட்ப வல்லுநர்- இலங்கை குடியரசின் சமாதான நீதவான் அவர்கள் நல்லூரைச் சேர்ந்த ஓய்வுபெற்ற சிறைச்சாலைக் களஞ்சியப் பொறுப்பாளர் நடராசாவின் மகள் திலகவதியை திருமணம் செய்து இனிதே வழக்கம்பரையில் வாழ்ந்து வருகின்றார். இவர்களுக்கு ஒரு ஆண் மகனும், மூன்று பெண்களுமாவார். பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளைக் கண்டு மகிழ்ந்தார்.

மூன்றாவது புத்திரி நாகரெத்தினம் (அம்மம்மா - நெசவு ஆசிரியை) அவர்கள், மானிப்பாயைச் சேர்ந்த சோமசுந்தரம் ஜெயநாதன் (காணி அபிவிருத்திக் களஞ்சியப் பொறுப்பாளர்) அவர்களைத் திருமணஞ் செய்து சீரும் சிறப்புடனும் மானிப்பாயில் வாழ்ந்து வருகின்றார். இவர்களுக்கு நான்கு ஆண்கள், மூன்று பெண்களுமாக பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளைக் கண்டு மகிழ்ந்தார்.

நாகரெத்தினம் தாயில் விசேட பற்றுப் பாசம் உள்ள பிள்ளை. தாயின் இறுதிக் காலத்தில் தனது மக்களைப் பார்க்க லண்டன் சென்றிருந்தார். தாயின் மரணச் செய்தி கேட்டதும் பறந்தோடி வந்து இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டார்.

இரண்டாவது மகன் சுந்தரராஜா குருக்கள் (சுந்தரம் எக்ஸிகியுரிவ் (Exticutive) அவர்கள் வல்வெட்டியைச் சேர்ந்த விசுவலிங்கம் விஜயலட்சுமி அவர்களைத் திருமணம் செய்து வழக்கம்பரையில் இனிதே வாழ்ந்து வருகின்றார். இவர்களுக்கு இரண்டு ஆண் பிள்ளைகள், ஒரு பெண் பிள்ளைகளுமாக பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகளைக் கண்டு மகிழ்ந்தார்.

நான்காவது புத்திரியான இராஜரெட்ணம் (இராசாத்தி) (சங்கீதரெத்தினம் ஆசிரியை) அவர்கள் நல்லூரைச் சேர்ந்த கந்தையா ஜெயரட்ணம் அவர்களைத் திருமணம் செய்து சீரும் சிறப்புடனும் கனடாவில் வாழ்ந்து வருகின்றார். இவர்களுக்கு இரண்டு பெண் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளை களைக் கண்டு மகிழ்ந்தார்.

மூன்றாவது புத்திரன் செல்வன் திருஞானசம்பந்தர் (துரை) அவர்கள் அம்பாளுக்கு அரும்பெரும் தொண்டுகளாற்றி தனது 25ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

ஐந்தாவது புத்திரி லோகநாயகி (சந்திரா) அவர்கள் திருமலையைச் சேர்ந்த துரைராசா தெய்வகுமார் அவர்களை திருமணம் செய்து பல சிறப்புக்களுடன் தற்போது பிரான்சில் வாழ்ந்து வருகின்றார். இவர்களுக்கு இரண்டு ஆண்களும், ஒரு பெண் பிள்ளையுமாக வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களுடன் காலஞ்சென்ற திருமதி மகேஸ்வரி (கிளி) தியாகராஜா ஆகிய மருமகளையும் தனது மகள் போல் பேணிக் காத்து வந்தார்.

**" என் கடன் பணி செய்து கிடப்பதே "** என்ற அப்பர் **வாக்குக்கிசைய** அம்மா அவர்கள் நிகழும் பார்த்திப வருடம் **வைகாசித்** திங்கள் 2ம் நாள் பூர்வபட்ச அட்டமி திதியில் இறை **வனடி** சேர்ந்தார்.

ஓம்சாந்தி' சாந்தி' சாந்தி'

பணிவுள்ள
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# பெரிய பிள்ளையின் புலம்பல்

என் அம்மா அம்மா தாயே! என்னை பெற்றவரே! அம்மா என் பெரிய பிள்ளை கூப்பிடுகின்றேன். கேட்க வில்லையா? தாயே என் பொன்னடி வைத்தடி தெய் வமே தாயே அம்மா நீங்கள் சாகவில்லை அம்பாளிடமே இருக் கிறீர்கள்.

அம்மா உங்களிற்கு மூன்று நேர பூசை நடக்கும். அம்மா" ஔவையாரை பிள்ளையார் கூட்டிப்போனது போல நீங்கள் அம்பாளிடம் போய் விட்டீர்கள் தாயே! என்னையும் உங்களைப் போல வரவேண்டும் என என்னை இருபா லைக்கு அனுப்பி வைத்து என் செல்வங்கங் களையெல்லாம் ஆளாக்கி ஆறுதல் சொல்லி வந்த அம்மா இனி நான் யாரை கூப்பிட்டு சொல்வேன்.

அம்மா நீங்கள் எத்தனை பேருக்கு அன்னம் அளித்தது குறையுமா? தாயே நாங்கள் ஒரு வருத்தம் சொன்னால் " வடிவாகச் சாப்பிட்டு சந்தோசமாக இருங்கள் என்று டாக்ட்டராகவும் தாயாவும் எங்களை வழிநடத்தி வந்தீர்கள்.

தாயே! இனி என் சகோதரி சகோதரர்களின் பிள்ளை கள் பேரப்பிள்ளைகள் உங்கள் பூட்டப்பிள்ளைகளுக்கு இனி யார் ஆறுதல் சொல்வார்கள்? "ஆச்சி ஆச்சி" என அழுகின் றார்கள். அம்மா ஏன் இப்படி அன்பு வைத்தீர்கள் அம்மா.

என் கண்ணீர் காணிக்கை

உங்கள் பெரியபிள்ளை,
மகள் வேதரத்தினம்

# கண்கண்ட தெய்வம்

அன்பால் அமுதூட்டி பண்பால் அரவணைத்த பாசமென்னும் பணிவுகாட்டி பரிவுடன் எமை வளர்த்து ஆளாக்கி வைத்த கண்கண்ட தெய்வம் அம்மா. எங்கள் குலதெய்வம் அம்பாள் மாதிரி எங்களுக்கு நல்ல அறிவுரைகள், பழக்கவழக்கங்கள் சொல்லி பண்பாக வளர்த்த அன்புத்தாய் என் அம்மா. என்னை எவ்வளவு செல்லமாக வளர்த்த நான் திருமணம் செய்யும் முன் உங்களுடன் நீண்டகாலம் இருந்தேன். திருமணம் செய்த பின்பும் உங்களுடன் நீண்டகாலம் இருந்து உங்களுக்கு என்னால் இயன்ற கடமையைச் செய்தேன் என்ற மனநிறைவுடன் உங்களை நினைத் தபடி இருக்கிறேன்.

பிரான்ஸ் நாட்டிற்கு வந்து 10வருடங்களாகிவிட்டது. ஆனால் ஒவ்வொரு நாளும் என் மனம் அம்மாவை எப்போ பார்ப்பேன் அவவிற்கு என் கையால் சாப்பாடு கொடுப்பேன் என்ற நினைவில் இருப்பேன்.

அம்மா நான் உங்களுடன் இருக்கும்போது எனக்கு இட்ட கட்டளை நீ ஒவ்வொரு நாளும் அம்பாளுக்கு பூமாலை கட்டிக் கொடுக்க வேணும் என்று சொல்லுவீர்கள். நான் வெளிநாட்டிற்கு புறப்படும் போது சொன்னீர்கள் நீ உனது இடத்தில் வந்து இருக்கவேணும் வந்து இருந்து அம்பாளுக்குத் தொண்டு செய்யவேணும். அம்மா பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள் ளைகள், பூட்டப்பிள்ளை எல்லோரையும் ஒரே மாதிரித்தானே பார்த்தீர்கள். அம்மா உங்கள் பேரப்பிள்ளைகள் எல்லாம் கதறிக் கண்ணீர் விடுகிறார்கள். ஆச்சி எமக்கு பாசத்தை ஊட்டி வளர்த்தார் என்று. அம்மா நீங்கள் அம்பாளுடன் கலந்து விட்டீர்கள்.

ஓம் சாந்தி' சாந்தி' சாந்தி

அன்பு மகள்
சந்திரா தெய்வகுமார்

# திருமதி அன்னபூரணம் சுப்பிரமணியம்
## மனித ரூபத்தில் வந்த தெய்வம்

எங்கள் எல்லோரையும் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டுப் பிரிந்த தொல்புர ஆச்சி, வெள்ளை ஆச்சி, வழக்கம்பரை ஆச்சி என அழைக்கப்படும் திருமதி அன்னபூரணம் சுப்பிரமணியம் 16.05.2005 அன்று இறைவனடியெய்தியுள்ளார்.

அன்னாரின் மறைவுச் செய்தியைக் கேட்டதும் பேரப்பிள்ளைகளான நாங்கள் என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறினோம். அன்பினால் எங்களை ஈர்ந்தெடுத்த ஆச்சி எங்கள் எல்லோருக்கும் மிகவும் நல்வழிகாட்டும் அம்மம்மாவாகவும், அப்பம்மாவாகவும் இருந் துள்ளார். மிகுந்த ஞாபகசக்தி , திடகாத்திரம், அன்பு, தெய்வீக சக்தி நகைச்சுவை, கெட்டித்தனம், மனத்தைரியம், பலயோசனைகளைக் கொண்டு நடத்தும் வல்லமை பொருந்திய ஆச்சியாக விளங்கியவர். ஆச்சியின் வாழ்க்கையில் நாங்கள் படித்த பாடம் ஒற்றுமையாக எப்படி இருப்பது என்பதாகும். பாகுபாடற்ற முறையில் எல்லாப் பேரப்பிள்ளைகளையும் சமனாக நடத்தி எல்லாருடைய அன்பையும் பெற்று மிகவும் உயர்ந்த ஸ்தானத்தில் இருந்துள்ளார்.

ஆச்சியின் விருந்துபசாரம் தனி. எவர் வீட்டுக்கு வந்தாலும் மனம் கோணாமல் மனம் உவந்து வரவேற்று விருந்தளிப்பார். லண்டனில் நாங்கள் கோயில்களில் சிலவேளை பிரபல தவில் நாதஸ்வர வித்துவான்களைச் சந்திக்கும்போது அவர்களுடன் பேசும்போது அப்பாவின் பெயரைச் சொல்லி நாங்கள் எங்களை அறிமுகப்படுத்துவது உண்மை.அந்தவேளை அவர்கள் சொல்வார்கள் அம்மாவிடம் சாப்பிட்டதை மறக்கமுடியுமா? அன்புடன் பரிமாறிய சாப்பாடு அவர்களை மறக்கமுடியாமல் செய்துள்ளது.

ஆச்சியின் வழிநடத்தலில் வளர்ந்த நாங்கள் லண்டனில் இருக்கும்போதும் ஒவ்வொரு விசேட வைபவத்திலும் ஒற்றுமையாகவும், அன்பாகவும், அந்த வைபவங்களைச் சிறப்பாக நடத்தி

நகைச்சுவையுடன் கதைத்து கவலையான நேரத்திலும் சிரித்த வண்ணம் இருப்போம். எரிச்சல், பொறாமை வரவேண்டிய சந்தர்ப் பங்கள் இல்லை. ஒரு குடும்பமாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இதற்கு மூலகாரணம் எங்களை விட்டுப் பிரிந்த ஆச்சிதான்.

ஆச்சி உங்களுக்கு என்ன குறை? பிள்ளைகள், பேரப்பிள் ளைகள், பூட்டப்பிள்ளைகள் எல்லோரையும் பார்த்து விட்டீர்கள். வழக்கம்பரை முத்துமாரி அம்பாளின் அருளைப் பெற்று ஆச்சி உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நன்றி.

பேரப்பிள்ளைகள்.
பூட்டப்பிள்ளைகள்.

**ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து**
**வேண்டும் பனுவல் துணிவு.**

**துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து**
**இறந்தாரை எண்ணிக்கொண் டற்று.**

**- திருக்குறள்**

# என் அருமை 'வெள்ளை ஆச்சி'

என் அம்மம்மாவை பாசமுடன் வளர்த்தீர்!
என் அம்மாவையும் பாசமுடன் வளர்த்தீர்!

அதுமட்டுமல்லாமல் எங்களையும் ஊட்டி ஊட்டி வளர்த்தீர்! "வெள்ளை ஆச்சி" என்றதும் நாம் துள்ளிக் குதிப்போமே! இனி யாரை நாம் "வெள்ளை ஆச்சி" என்போம். அடிக்கடி எம்மை பார்க்க பஸ் ஏறி களைத்துப் போய் வருவீர்களே! "உன்னை பார்க்க வேணும் போல இருந்தது வந்து விட்டேன் என்று சொல்லிக்கொண்டே சந்தோஷப்படுவீர்களே! இன்றும் அந்த சொல் என் காதில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றது. என் குறும்பு களைப் பார்த்து கெக்கட்டம் விட்டு சிரிப்பீர்களே! அந்த சிரிப் பொன்றே போதும் நாம் மகிழ்வடைய. என்னை பக்கத்தில் இருத்தி பழைய கதைகள் கூறி புத்திமதிகள் கூறுவீர்களே!

அதை நான் என்றென்றும் மறக்கமாட்டேன் வெள்ளை ஆச்சி! நிட்சயம் நீங்கள் கூறியது போல் நல்வழியில் நடப்பேன். உங்களை போன்ற அன்பான வெள்ளை ஆச்சியை நான் இனி எப்பிறப்பில் பார்ப்பேன். மனம் ஏங்கி தவிக் கின்றேன். அன்று என் கையை பிடித்து சிரித்துக் கொண்டு சொன்ன வார்த்தை" பயப்படாதே எனக்கு ஒன்றும் இல்லை, சும்மா தடிமன் தான். இது அடிக்கடி வருவது தானே மாறி விடும்" என்று சொன்னீர்களே. நானும் நம்பி விட்டேன் " நாளை என் வெள்ளை ஆச்சி என் வீடு வருவா" என நம்பிக் கொண்டு வீடு திரும்பினேன். ஆனால் வந்த செய்தியோ .............

என் அன்பு ஆச்சிக்கு பூட்டப்பிள்ளையின்
கண்ணீர் பூக்களை சமர்ப்பிக்கின்றேன்.

செல்வி. பிரகாஷிகா காண்டீபன் (பிக்கா)
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)
ஆண்டு 8

# GONE TO THE PROPER PLACE

Lathanki Palachandran
10 Tappscott Road # 509
Scarborough, Ontario
MrB 3L9
Canada.

There is no motto to express my Aachi. She is like a vesta devoted her life to grand and great grand children. The rosy hands in which crystal, diamonds, and pearls shattered into pieces with a shock to all family and other people of the area.

She nurtured my sister Suja and me like a parrot and she still living in my lotus shape heart. Life is not permentant and with a snap of finger the destiny took her to the place where she suppose to go. Aach we all miss you and we love you so much.

Love Lathanki Balan, Lavena Pragathi and Kuberini

# உறவுக்கோர் அம்மா

ஊருக்கோர் அம்மா.
ஊரவரின் உறவிற்கோர் அம்மா.
உள்ளச் சுமைகள் இறக்கிடுவோருக்கு அம்மா.
உண்டி பெறவோர் அம்மா.
உள்ளத்துணர்வுகளோடு உறவாடவோர் அம்மா.
உறங்கிக் கிடப்பவனுக்கு உசார் தரும் அம்மா.
உல்லாசத்தில் உவகை கண்டிடவோர் அம்மா.
உறவினரில்லாதோருக்கு உறவுதரும் அம்மா.
உலைவைக்க ஊதியம் பெருதாருக்கோர் அம்மா.
உதடு சிவக்க தாம்பூலம் தந்திடுவோர் அம்மா.
உன்னிப்பாய் உரையாடி மகிழ்ந்திடவோர் அம்மா
உருக்குலைந்த குடும்பத்தினைஇணைக்குமோர் இனிய அம்மா.
உடுக்கை இழந்தவனுக்கு உதவிடும் அம்மா.
உலகெங்கும் வாழும் உறவினருக்கோர் அம்மா.
உரக்கப் பேசியவனுக்கு இரக்கம் காட்டிய அம்மா.
உரலில் இடித்து உடலுக்கு உறுதியூட்டிலதோர் அம்மா.
உற்றவருக்கு உதவிடும் ஓர் அம்மா.
உள்ளத் தூய்மையை உடலில் கொண்டதோர் அம்மா.

உன்வயிற்றில் கருவான அப்பர், சுந்தரர், சம்பந்தர், வேத ரத்தினம், தங்கரத்தினம், நாகரத்தினம், இராசரத்தினம், லோக நாயகி எனும் எட்டுபேருக்கும் மட்டும் அம்மாவல்ல எம்மனை வருக்கும் அம்மாவே உன்தாழ் பணிந்து உன் ஆசி பெற்று உலகம் போற்றிட வாழுகிறோம் அம்மா. உடலிருந்து உயிர் பிரிந் தாலும் உள்ளங்களில் நிறைந்து வாழும் அம்மா.

அறிஞன் சாமி அப்பாத்துரை
கனடா.

# இரங்கலுரை

அன்னபூரணி அம்மையார் அவர்கள் சுப்பிரமணி ஐயாவை 1985 ல் தவறவிட்ட பின்னும் மனம் தளராமல் பிள்ளைகளின் உதவியோடு உசார் நிலையில் வாழ்க்கையை நடத்தினார். பிள்ளைகளும் தாயாரின் சொற்கேட்டு பணிவுடன் நடந்தனர். வீட்டு நிர்வாகத்துடன் கோயில் நிர்வாகமும் நடத்துவது மிகவும் கஷ்டமான வேலை. அம்மையார் இதனைச் சிரமமின்றி நடத்தி ஒப்பேற்றினார். அன்னபூரணி அம்மையார். அம்மன்தான் பூமியில் வந்து நடமாடுகிறாவோ என்று எண்ணக்கூடிய அளவு, அழகும், சௌந்தர்யமும், தண்ணளியும், இனிய மொழியும் வந்தாரை வரவேற்று உபசரித்தும் அன்பு உள்ளமும் கொண்டவர்.

வட இந்தியாவிலுள்ள காசி விசுவநாதருடைய சக்தி அன்னபூரணி. அவரின் திருக்கரம் ஒன்றில் ஒரு சிறு பாத்திரமும் மறு கையிலே ஒருகரண்டியும் காட்சியளிக்கும். கரண்டியாலே பாத்திரத்திலுள்ள அன்னத்தை மக்கள் பசியாற வாரி வழங்குவது கருத்து. இதே போல் எங்கள் அன்னபூரணி அம்மாவும் மனங் கோணாமல் மக்களுக்கு வாரி வழங்கினார்.

தேவர்களும் சிவபூமியிற் பிறந்து நீண்டகாலம் வாழவேண்டும். இது

**சிவனுய்யக் கொள்கின்ற ஆறென்று நோக்கி**
**திருப்பெருந்துறையுறைவாய் திருமாலாம்**

அவன் விருப்பெய்தவும் மலரவனும் ஆசைப்படுகிறார்கள், இந்த பூமியில் தான் இறைவனை வழிபட்டு முத்தியடையலாம் என்பது ஆராய்ந்து அறிந்த அறிஞர் கூற்று. முனிவர்களும், ஞானிகளும் சொல்கின்றனர். இதற்கமைய அம்மையார் 87 ஆண்டுகள் இப்பூமியில் வாழ்ந்து பழுத்த பழமாகி நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பெற்று இறுதிநேரத்தில் அறிவு மங்காது வாழ்ந்த நினைவோடும் இறையடி சேர்ந்துள்ளார்.

அன்னபூரணி பெரிய ஆல விருட்சமாகி அநேக விழுதுகளுடன் வாழ்ந்தார். பெற்ற பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளுடன் பொலிந்து நிறைந்து பூரணமான வாழ்வு வாழ்ந்து இறையடி சேர்ந்தார்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்"

என்ற வள்ளுவர் வாக்கு அம்மையாரின் வாழ்க்கையில் நிதர்சனமாக உள்ளது.

'போற்றி போற்றி அம்மையாரின்
பொன்னடிக்குப் போற்றி'.

அன்பர்
திருமதி நடராசா
பண்ணாகம்.

**அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு.**

**அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு**
**என்போடு இயைந்த தொடர்பு.**

– திருக்குறள்

திருமதி அன்னபூரணம் சுப்பிரமணியம் ஐயா
அவர்க்களுக்கு
தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலய
பரிபாலன சபையாரின்

# கண்ணீர் அஞ்சலி

எங்கள் ஆலயப் பணிகளில் நீண்டகாலமாக நடமாடும் அம்பாளாக எமக்குக் காட்சி தந்து அம்பாளின் திருவமுதை ஆக்கிப் படைத்து உதவும் தொண்டைச் செய்து வந்ததை நாம் மறக்க முடியாதவர்களாக உள்ளோம். இவர் ஆலயம் வரும் யாவரையும் அன்பால் கட்டி அவர்கள் மகிழ்ந்து சென்றதை நாம் அறிவோம். நல்ல சுகதேகியாக வாழ்ந்து அம்பாளின் பாதத்தைப் பற்றியுள்ள அம்மையாரின் பிரிவால் துயர் உறும் யாவருக்கும் ஆறுதல் கூறி எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

வழக்கம்பரை,
தொல்புரம்,
18–05–2005

இங்ஙனம்
பரிபாலன சபையாரும்
க. வாமதேவன்
பஜனை சபையினரும்.

# உணவே மருந்து

1. கொண்டல் துளிரை அரையல் செய்து சாப்பிட்டால் நன்கு வயிறு கழியும்.

2. வெள்ளைப் பூண்டை மென்று தின்றுவர இரத்த அழுத்தம், கொலஸ்திரோலைக் கட்டுப்படுத்தும்.

3. வேப்பம்பூ இரத்தத்தில் கொலஸ்திரோலின் அளவைக் கட்டுப்படுத்தும்.

4. உள்ளியில் இருந்து தயாரிக்கப்படும் பூண்டுத்தேன் வாய்ப்புண், லசுனதாபிதம் (Tonsilitis) என்பவற்றுக்கு நல்ல மருந்து.

5. வசம்பு, மிளகு இரண்டையும் அரைத்து (பாரிசவாதத்தில் நாக்கு மரத்து பேசமுடியாமல் இருப்பவர்களுக்கு) நாக்கில் பூசி 10-15 நிமிடம் அப்படியே விட்டு பிறகு வசம்பு, மிளகு சேர்த்து செய்த குடிநீரினால் வாயை கொப்பளிக்கப் பண்ணி வந்தால் நாக்கு திருந்தி பேச்சு வரும்.

6. பெண்களில் மாதவிடாயின் போது காணப்படும் பெரும்பாடு எனப்படும் அதிரத்தப் போக்கிற்கு அத்திப் பிஞ்சில் குளம்பு செய்து சாப்பிட்டு வர மாறும்.

7. விடத்தல் இலையை பிட்டுமாவுடன் கலந்து அவித்து சாப்பிட்டு வந்தாலும் பெரும்பாடு நீங்கும்.

8. தாமரைக் கிழங்கை கறி அல்லது பொரியல் செய்து சாப்பிட்டு வர மூல ரோகம் குணமாகும்.

9. வெங்காயம், தேங்காய்ப்பால், கற்கண்டு சேர்த்து சுண்டக் காய்ச்சி, உண்ண வரட்டிருமல் குணமாகும்.

10. செவ்வரத்தம்பூவை பச்சடி செய்து உண்டுவர சிறுநீர் நன்கு கழியும். கர்ப்பிணிகளுக்கு இது மிகநன்று. குழந்தைகளின் கிரந்திக்கும் இது நன்மைபயக்கும்.

11. செவ்வரத்தும்பூவை இரவில் நீரில் ஊறவைத்து காலையில் எழுந்தவுடன் பருகிவந்தால் கர்ப்பிணிகளில் ஏற்படும் கால்வீக்கம் தணிவடையும்.

12. இதரை வாழைப்பூவை கறிசமைத்து உண்டுவந்தாலும் கருத்தரிக்கும். எனவே குழந்தையில்லாத பெண்கள் தமதுணவில் இதை சேர்த்து வரலாம்.

13. பாலூட்டும் தாய்மார் ஈரப்பலாக்காய் கறிசமைத்து உண்டுவந்தால் தாய்ப்பால் அதிகம் சுரக்கும். இதன் வாய்வுத் தன்மையை நீக்க உள்ளி, வெந்தயம், சிறிது முருங்கையிலை என்பவற்றைச் சேர்த்து கறி சமைக் கவும்.

14. பருவமடைந்த பெண்களும், திருமணமான பெண்களும் உளுந்தை தமதுணவில் அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டும். இது இடுப்பு பலம் பெறச்செய்யும். கருத் தரித்தலுக்கு உதவும்.

15. பூஞ்சணம் பிடித்த ஒடியல், புழுக்கொடியல் என்பவற்றை உண்ணக்கூடாது. அவற்றில் Aflatoxin என்னும் ஒரு நச்சுப் பொருள் ஏற்பட்டுவிடுகிறது. அதனால் ஈரலில் புற்றுநோய் ஏற்பட வாய்ப்புள்ளது.

16. சிறுகுழந்தைகளுக்கு மலச்சிக்கல் ஏற்பட்டால் பச்சை ஓமத்தை அவித்துக் கொடுக்க மலங்கழியும்.

17. சிறுகுழந்தைகளில் ஏற்படும் வயிற்றுப் போக்கிற்கு ஓமத்தை வறுத்து அவித்து சிறிது தேனும் சேர்த்துக் கொடுக்க மாறும்.

18. கொவ்வை இலையை வறை செய்து சாப்பிட்டாலும் நீரிழிவு நோய் கட்டுப்படும்.

19. நீற்றுப் பூசணிக்காயை கறிசமைத்து உண்டுவர உடற் சூடு தணியும். பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைபடுதல் நோய் குணமாகும்.

20. சுக்கு அல்லது வேர்க்கொம்பு சேர்த்துத் தயாரிக்கப்படும் தேநீரைப் பருகினால் குளிர், நடுக்கம், காய்ச்சல் என்பன மாறும்.

21. சுரைக்காய் கறிசமைத்து உண்டுவர உடல்வீக்கம், சிறுநீர்எரிவு, சலக்கடுப்பு என்பன நீங்கும். சிறுநீர் தாராளமாகக் கழியும்.

22. வெள்ளரிக்காயைக் கறிசமைத்துண்டுவந்தாலும் இதே விளைவுகள் ஏற்படும்.

23. தக்காளிப் பழத்தில் ஒட்சாலிக்கமிலம் உள்ளதால் சிறுநீரகக் கல் உள்ளவர்களுக்கு ஆகாது.

24. முருங்கைக்காய், கோவா, பசளிக்கீரை என்பனவும் சிறுநீரகக்கல் உள்ளவர்களுக்கு ஆகாது.

25. வட்டத்துத்தி இலையை நெய்யில் வதக்கி உண்டுவர மூலரோகம் குணமாகும்.

26. நெல்லிக்காயில் பெரும்பாலான சத்துகள் உள. முக்கிய மாக உயிர்ச்சத்து C இதில் அதிகளவில் உண்டு. காய்ந்த நெல்லிக்காயை நெல்லிவற்றல் அல்லது நெல்லிமுள்ளி என்பர். இதிலும் உயிர்ச்சத்து Cயின் அளவு குறைவதில்லை.நெல்லிக்காயை வேகவைக்காமல் பச்சையா உண்ணவேண்டும். வேகவைப்பதனால் உயிர்ச் சத்து C பெருமளவில் ஆவியாக இழக்கப்பட்டுவிடும்.

27. பப்பாக்காயில் PAPAINE என்னும் பொருள் அதிகளவில் உண்டு. இதுவே கருச்சிதைவை ஏற்படுத்தக் கூடியது.

28. பேரீச்சம்பழத்தில் உயிர்ச்சத்துக்களும் இரும்புச் சத்தும் நிறைய உண்டு. குருதிச்சோகை, உடற் பலவீனம் உள்ளவர்கள் தினமும் இதைச் சாப்பிட்டு வரலாம்.

29. மரவள்ளிக்கிழங்கையும் இஞ்சிக்கிழங்கையும் சேர்த்துச் சாப்பிட்டால் அது நஞ்சாகி, சிலவேளை மரணம் கூட ஏற்படலாம். காரணம் மரவள்ளிக்கிழங்கிலும் (நீலம் பாரித்த) இளம் இலைகளிலும் CYANOGENIC GLYCOSIDE, LINASE நொதியம் என்பன உண்டு. இவை சேர்ந்து HCN என்னும் சையனைட்டு நஞ்சை உண்டாக்கி விடுகின்றன. இஞ்சிக்கிழங்கிலும் LINASE போன்ற நொதியம் உள்ளதால் இஞ்சியும் மரவள்ளிக் கிழங்கும் சேர்த்து உண்ணும்போது அதே நச்சுப் பொருள் ஏற்பட வாய்ப்புள்ளது.

30. மரவள்ளிக்கிழங்கை சமைக்கும்போது அதை மூடு மளவுக்கு தண்ணீர்விட்டு, திறந்து (மூடாமல்) சமைக்க வேண்டும் இதனால் நச்சுத் தன்மைக்குக் காரணமான LINASE நொதியமும் HCN உம் அழிக்கப்பட்டுவிடும்.

31. முசுட்டை இலையைப் பாற்சொதி செய்து சாப்பிட்டுவர மலச்சிக்கல், கைகால் எரிவு என்பன குணமாகும்.

32. சலக்கடுப்பு, சிறுநீரகக்கல் உள்ளவர்கள் இடைக்கிடை முள்ளங்கியை கறிசமைத்து உண்டு வரலாம்.

33. குரக்கனைப் போலவே வரகரிசியும் நீரிழிவைக் கட்டுப் படுத்த உதவும்.

34. வாழைப்பூ கறிசமைத்து உண்டுவந்தால் பெண்களுக்கு ஏற்படும் பெரும்பாடுநோய் குணமாகும்.

35. வெந்தயத்தை உணவில் சேர்த்துவந்தால் அது நீரிழிவைக் கட்டுப்படுத்தும்.

36. வெந்தயத்தை இரவில் நீரில் ஊறவைத்து காலையில் அந்த நீரைப் பருகிவந்தால் இரைப்பை குடற்புண்நோய் எனப்படும் குன்மநோய், வயிற்றுவலி, அஜீரணம் என்பன குணமாகும்.

37. குன்மநோய் எனப்படும் இரைப்பை - குடற்புண் நோய் உள்ளவர்கள் நாரத்தங்காய் ஊறுகாய், எலுமிச்சங் காய் ஊறுகாய் போன்றவற்றை சாப்பிடக்கூடாது என் கிறார்கள். இது அவ்வளவு ஏற்புடையதல்ல. உணவின் இறுதியில் (ஆரம்பத்தில் அல்ல) இவற்றைச் சேர்த்துக் கொள்வதால் நன்மை ஏற்படும். இவற்றில் உள்ள உயிர்ச்சத்து C புண்ணை ஆற்ற உதவும். மேலும் இவை துவர்ப்புச்சுவை, உப்புச்சுவை மிக்கவையாக இருப்பதும் புண் ஆற அனுகூலமாக இருக்கும்.

38. அரைக்கீரை, காய்ந்த கொட்டைகள் என்பவற்றை குழந்தை களின் உணவில் தவிர்க்க வேண்டும். பாலூட்டும் தாய் இவற்றை உண்டபின் பிள்ளைக்குப் பால்கொடுத்தால் பிள்ளைக்கு மாந்தநோய் ஏற்படும். இவற்றில் பியூரீன் (Purine) என்னும் புரதப் பொருள் அதிகமுண்டு. குழந்தைக ளின் சிறுநீரகம் நன்கு விருத்திய டைந்திருப்பதில்லை. எனவே பியூரீனால் உண்டாகும் நைதரசன் கழிவுகளை வெளியேற்றுவதில் பிரச்சினைகள் ஏற்பட் உடலுக்கு பாதிப்பு ஏற்படும்.

39. மூட்டுவாத நோயுள்ளவர்களும் பியூரீன் அதிகம் உள்ள கோவாப்பூ, அரைக்கீரை, காய்ந்த கொட்டை போன்ற வற்றை விலக்க வேண்டும்.

40. மூட்டுவாத நோயுள்ளவர்கள் பூசனிக்காய், பாகற்காய், பழப்புளி, பயற்றங்காய் போன்றவற்றை விலக்கல் நன்று.

41. இலுப்பெண்ணெய் மூட்டுவாதநோய், தோல் வியாதி களைப் போக்கவல்லது. வாதநோயாளிகள் இலுப்பெண் ணெயைப் பயன்படுத்தலாம்.

42. எலுமிச்சம்பழச்சாறும் சீனியும் 1:3 என்ற அளவில் கலந்து, வாயிலிட்டு உமிய கர்ப்பவாந்தி, ஓங்காளம் என்பன தணியும்.

43. காற்றோட்டிக்காயை உணவில் சேர்த்துவர வாய்வு பீனிசம், தலைவலி குணமாகும்.

# புற்றுநோய் பற்றிய சில தகவல் துளிகள்

**புற்றுநோய் என்றால் என்ன?**

*இது உடல் கலங்கள், உடலில் கட்டுப்பாட்டுக்கு அப்பால் தன்னிச்சையாக, அசாதாரண முறையில் பெருக்கமடைவதால் ஏற்படும் வளர்ச்சிகள் (கட்டிகள்) எனக் கொள்ளலாம். இது உடலின் எப்பகுதியிலும் ஏற்படலாம்.*

**இலங்கையில் புற்றுநோய் ......**

*இலங்கையில் புற்றுநோயால் பாதிப்படைவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. ஒரு வருடத்தில் சுமார் 12, 000 புதிய புற்றுநோயாளர்கள் இனம் காணப்படுகின்றார்கள். பெரும்பாலானோர் பிந்திய நிலையிலே வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆண்களில் வாய் தொண்டைப் புற்றுநோய் அதிக அளவில் ஏற்படுகின்றது. பெண்களில் மார்பகப் புற்றுநோய் அதிக அளவில் ஏற்படுகின்றது.*

**புற்றுநோய்க்குரிய எச்சரிக்கை அறிகுறிகள் யாவை?**

1. நீண்ட காலம் நிலைத்திருக்கும் இருமல் அல்லது குரல் வித்தியாசம்.
2. குணமடையாத புண்.
3. உடம்பில் கட்டு. தழும்பு அல்லது உண்ணி ஏற்படுதல் அல்லது பல காலமாக இருந்து திடீரென வளர்ச்சி அடைதல்.
4. மார்பகங்களில் அல்லது வேறு இடங்களில் ஏற்படும் கட்டிகள் அல்லது தடிப்புகள்.
5. பெண் யோனி வழியில் இருந்து அசாதாரணமாக இரத்தம் அல்லது வெள்ளைப் போக்கு ஏற்படுதல் அல்லது மாதவிடாய் நின்ற பின்பும் இரத்தப் போக்கு ஏற்படுதல்.
6. மலசலம் கழிக்கும் பழக்கத்தில் ஏற்படும் வித்தியாசம் அல்லது மலத்தோடு இரத்தம் வெளிவருதல்.

7. அதிக காலமாக நீடித்திருக்கும் அஜீரணம் (சமிபாடின்மை) அல்லது விழுங்குவதில் உள்ள கஸ்டம்.

**பிரதானமாக வாயில் புற்றுநோய் ஏற்பட முன்பு பல கண்ணால் பார்க்கக்கூடிய வித்தியாசங்கள் ஏற்படுகின்றன.**

1. உயர்ந்து தென்படும் அகற்றமுடியாத வெண்ணிற அல்லது செந்நிற தழும்பு ஏற்படுதல்.
2. செந்நிறமாகப் படர்ந்த பகுதி ஏற்படுதல்.
3. நீண்டகாலமாகக் குணமடையாத நோவில்லாத புண்.
4. நாவை மடிப்பதற்கு சிரமம் ஏற்படுதல்.

*எவரும் வாயை கண்ணாடியில் பார்த்து இவற்றை தெரிந்து கொள்ளலாம்.*

*மேற்கூறிய எச்சரிக்கை அறிகுறிகள் வேறும் பல நோய்களில் ஏற்படலாம். எனவே நீங்கள் வைத்தியரிடம் சென்று புற்றுநோய் தான் என அறிவதால் இதனை ஆரம்பநிலையில் கண்டறிய வாய்ப்புள்ளது.*

**புற்றுநோய்க்கான காரணிகள் யாவை?**

*புற்றுநோய்க்கான சரியான காரணிகள் எவையென இன்னமும் கூற முடியாதுள்ளது. எனினும் புற்றுநோய் ஆனது வாழ்க்கை முறை, பரம்பரை மற்றும் சுற்றாடல் காரணிகளின் கூட்டுத்தாக்கத்தின் விளைவாகவே ஏற்படுகின்றது எனக் கருதப்படுகின்றது.*

*எனினும் பல பாதகமான காரணிகள் புற்றுநோய் ஏற்படுவதற்கு துணையாக உள்ளன என இனங்காணப்பட்டுள்ளது.*

**பாதகமான காரணிகள்:**

1. புகையிலை பாவித்தல்:

இதனைப் புகைப்பதினாலோ, அப்புகையை அருகில் இருந்து உள்வாங்குவதாலோ அல்லது இதனைப் பாக்கு, சுண்ணாம்பு உடன் உட்கொள்ளுவதாலோ பாதிப்பு ஏற்படலாம்.

2. குடிவகை:

இதன் எரிவுத் தாக்கத்தால் வாய், களப் புற்றுநோய் ஏற்பட வாய்ப்புள்ளது. அத்துடன் இதனால் ஈரல் பாதிப்படைந்து ஈற்றில் ஈரல் புற்றுநோய் ஏற்படலாம்.

3. உணவுப் பழக்கம் :

சூடான, உறைப்பு நிறைந்த உணவு, கொழுப்புக்கூடிய உணவு, நார்த்தன்மை குறைந்த உணவு, செயற்கையாக நிறமூட்டப்பட்ட உணவு மற்றும் கிருமிநாசினி செறிந்த உணவு உட்கொள்ளவதால் எம்மில் புற்றுநோய் ஏற்படும் அபாயம் அதிகரிக்கின்றது. இதைத் தவிர்க்க நீங்கள் நிறைய மஞ்சள் பழவகைகள், கரட், பீற்றூட் மற்றும் பச்சை இலைவகைகளை நாள்தோறும் உட்கொண்டால் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பைக் குறைக்கலாம்.

4. வாய்ச் சுகாதாரம் இன்மை:

பாதிப்படைந்த பற்கள், கூரியபற்கள் வாய் உள்ளக மேலணியைத் தொடர்ந்து உறுத்துவதால் புற்றுநோய் ஏற்படலாம்.

5. இராசாயனப் பதார்த்தங்கள்:

அதிக காலம் இவற்றைக் கையாண்டு வேலை செய்வோர்க்கு குறிப்பாக, இரத்தப் புற்றுநோய் மற்றும் சிறுநீர்ப்பைப் புற்றுநோய், என்பன ஏற்பட வாய்ப்பு அதிகம் உள்ளது.

6. பெண்கள் மாதவிடாய் நின்ற பின்பு ஓமோன்களைப் பாவிப்பதால் மார்பகப்புற்றுநோய் ஏற்படவாய்ப்பு உள்ளது.

7. சூரியனில் இருந்துவரும் UV கதிர்கள் மற்றும் ஓசோன் படலத்தின் உடைவால் பூமியை அடையும் பாதகமான சூரியக்கதிர்கள்:

*தோல்ப் புற்றுநோயை ஏற்படுத்த வாய்ப்புண்டு. இது பிரதானமாக வெள்ளை இனத்தவரில் அல்லது அல்பினோவில் ஏற்படும்.*

8. அணுக் கதிர்த்தாக்கம் :

*அணு ஆலை, கதிர் உற்பத்தி இயந்திரம் என்பவற்றில் ஏற்படும் கசிவு மற்றும் அணுவாயுதப் பரீட்சை அல்லது அணுஆயுதப் பாவிப்பால் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பு அதிகம் உள்ளது.*

9. நெருங்கிய உறவினர்கள்:

*ஒரு சில புற்றுநோய்கள் உதாரணமாக மார்பகப் புற்று நோய், குடல் புற்றுநோய், மற்றும் இரத்தப் புற்றுநோய் என்பன பரம்பரை அலகுகளால் கடத்தப்படுகின்றன.*

10. நல்ல உடற் பயிற்சி இன்மை:

*மேற்கூறியவாறு உங்கள் பழக்கவழக்கங்களை மாற்றி பாதக காரணிகளில் இருந்து முடியுமானவரை உங்களை விலக்கிக் கொள்வதன் மூலம் உங்களைப் புற்றுநோய் அணுகாது பாருங்கள். புற்றுநோய்க்கான குணங்குறிகள் ஏற்படும் பட்சத்தில் வைத்தியரை உடன் சந்தித்து ஆரம்பநிலையில் உங்களுக்கான சிறந்த புற்று நோய்ச் சிகிச்சையை, குணமடையும் நோக்கில் மேற்கொள்ள ஒத்துழையுங்கள்.*

டாக்டர் ந. ஜெயகுமாரன்
யாழ் – போதனா வைத்தியசாலை

# வம்சவிருட்சம்

* சரவணமுத்து

↓

* தம்பையா குருக்கள்

\+

* முத்துச்சாமி குருக்கள் (கீரிமலை செல்லையா குருக்கள்)

\+

செல்லம்மா

## மனைவி (1)

* நகுலாம்பாள்
\+
* திருநீல

சிதம்பரநாதன்குருக்கள்
\+
சுந்தராம்பாள்
↓
சபாரத்தினம் ஐயா
பரமேஸ்வரி
லோகநாதன் ஐயா
மனோன்மணி
யோகேஸ்வரி
கிருஷ்ணநாதமூர்த்தி
மகேந்திரநாதக்குருக்கள்

## மனைவி (2)

* மீனாட்சிசுந்தரம்
\+
* வியாலாட்சி
↓
* மகேஸ்வரி (கிளி)
\+
* தியாகராஜா ஐயா
↓
* கிருஷ்ணராஜன் (ராஜன்)
ஜெயகௌரி (ஜெயா)
* ராதாகிருஷ்ணன் (பாலன்) U. K
சிவகௌரி (ஜீவா) U.K

அன்னபூரணம்
\+
* சுப்பிரமணியம்ஐயா
↓
வேதரத்தினம் (பெரியபிள்ளை)
தங்கரத்தினம் (தங்கம்)
முத்துக்குமாரசாமிஐயா (அப்பர் ஐயா)
நாகரத்தினம்(அம்மம்மா)
சுந்தரராசா குருக்கள் (சுந்தரம் ஐயா)
இராசரத்தினம் சங்கீதபூஷணம்
* திருஞானசம்பந்தர் (துரை)
லோகநாயகி (சந்திரா)

சாட்சிநாதர்ஐயா
\+
பொன்னம்மா
↓
புனிதவதி
* கௌரிநாதன்
* அம்பிகா
பரா
சின்னத்தம்பி
சின்னத்தங்கச்சி
* குகன்

* அமரர்

1

வேதரத்தினம்
+
* கெங்காதரன் ஐயா

- K. கிருபானந்தன் + சுபத்திராதேவி
  - துஷ்யந்தி (துஷி)
  - ரவிச்சந்திரன் (குமரன்)
  - கோபாலரட்ணா (கண்ணன்)
- K. பரமேஸ்வரன் U.K + மனோன்மணி (ரஞ்சினி) U.K
  - ரூபா U.K
  - கெங்காரூபன் (கோபி) U.K
- K. கனகராஜா U.K + உமாதேவி U.K
  - லக்ஷ்மன் U.K
  - ஜனனி U.K
  - துவாரகன் U.K
  - கஜானி U.K
- தயாநிதி + சோமசேகரம்
  - கஜேந்திரன் (கஜன்)
  - கஜீபன் (கஜீ)
  - மதுகரன் (மது)
- K. காண்டீபன் + ஜெயகௌரி
  - பானுசாய் (பானு)
  - சுபாங்கன் (தம்பா)
  - பிரகாஷிகா (பிக்கா)
  - பிரியங்கரி
  - வானதி
- K. உமாசுதன் (உமா) U.K + கலைவாணி (ராஜி) U.K
  - தர்ஷன் U.K
  - பிரியந்தன் U.K
- இராமநிதி (நிதி) U.K + கலைவாணி (வாணி) U.K
  - காயத்திரி (காயா) U.K
  - கஸ்தூரி (கஸ்து) U.K
- வேதகெங்கா + தியாகராஜன்
  - சாயிபிரசாந்தி
  - சாயிபிரசன்னா
- நந்தினி (France) + மணிபல்லவன் (பாபு) (France)
  - சாயிதன்யா (தன்யா) (France)
  - காருண்யா (France)

* அமரர்

❷

* தங்கரத்தினம்
+
* இராமசிவம்

- * ஜெயசந்திரன்
- மகேசன் (கண்ணன்) U.K
  +
  நாகராணி U.K
  ↓
  கௌஷினி U.K
- கௌரி (நேமா) U.K
  +
  இராமசூரியகுமார் (குமார்) U.K
- வாசுகி
  +
  முகந்தன் (பாபு)
- நமணன் U.K
  +
  பிரமினா U.K
  ↓
  சாயி வெங்கட் U.K
  சாயிகஜானன் U.K
- பகீரதன் (பகீர்) (U.K)
  +
  சஞ்சினி (U. K)

---

❸

முத்துகுமாரசாமி ஐயா (அப்பர் ஐயா)
+
திலகவதி (பேபி)

- மணிபல்லவன் (பாபு) France
  +
  நந்தினி
  ↓
  சாயிதன்யா (தன்யா)
  காருண்யா
- சுகன்யா (மீரா)
  +
  ஆனந்தசிவம்
  ↓
  தியானி
- வைதேகி (பிரபா)
  +
  புலேந்திரன்
  ↓
  சங்கீர்த்தனா
  சங்கீர்த்தனன்
  சதுர்ஷன்
- கௌதமி (வீணா)
  +
  இராஜேஸ்வரன்
  ↓
  அபிஷனா

* அமரர்

**4**

நாகரத்தினம்
+
ஜெயநாதன்

↓

சத்தியபாமா (பாமா)(U.K)
+
இரட்ணசபாபதி (U.K)
↓
உஷாயினி (U.K)
ஷிஹனி (U.K)
பிரேமசாயி (U.K)

சிவகுமார் (ரஞ்சன்) (U.K)
+
சிவகௌரி (ஜீவா)(U.K)
↓
விஷ்மன் (U.K)
கிருஷன் (U.K)
சாயிமா (U.K)

சுந்தரகுமார் (சுரன்) (U.K)
+
கெங்கா (U.K)
↓
விபூஷணன் (U.K)

ஜெயகுமார் (குமார்) (U.K)
+
கௌஷல்யா (U.K)
↓
அஷ்வின் (U.K)
பிரவீன் (U.K)
சொனாலி (U.K)

விஜயலஷ்மி (விஜி) (U.K)
+
சிவேந்திரன் (U.K)
↓
சிவேசன் (U.K)
ஜெனுசன் (U.K)

ஜனலஷ்மி (ஜனா) (U.K)
+
கணேஸ்வரன் (U.K)
↓
கபீதினி (U.K)
லக்ஷன் (U.K)

ஜெனகுமார் (லவன்) (U.K)
+
சாரதா (U.K)
↓
ஆதிகீரதன் (U.K)
சௌமியா (U.K)

௫

சுந்தரராஜ குருக்கள் (சுந்தரம் ஐயா)
+
விஜயலட்சுமி (விஜயா)

- சிறிமஞ்சினி (கனடா)
  +
  முகுந்தன் (கனடா)
  - கரிஷிகன் (கனடா)
  - அனுஷன் (கனடா)
- சிறிரங்கன்
  +
  நீரஜா
  - சாகரவர்த்தினி
- சிறிசங்கர் (கனடா)
  +
  சர்மிளா (கனடா)
  - அஜய் (கனடா)
  - ஜெனிகா (கனடா)
  - ஜெனிஷா (கனடா)

**6**

திருமதி இராசரத்தினம் ( சங்கீதபூசணம்)
+
ஜெயரட்ணம் (கனடா)
↓

லதாங்கி (லதா) கனடா
+
பாலசந்திரன் (பாலன்) கனடா
↓
லவிணா
பிரகதி
குபேரினி

சுஜாங்கி *

---

**7**

திருஞானசம்பந்தர் *

---

**8**

லோகநாயகி ( சந்திரா) (பிரான்ஸ்)
+
தெய்வகுமார் (பிரான்ஸ்)
↓
பிரகலாதன் (பிரபு) பிரான்ஸ்
பிரியதர்ஷினி ( பிரியா) பிரான்ஸ்
பிரசாந்தன் (சாந்தன்) பிரான்ஸ்

* அமரர்

# நன்றி நவிலல்



எமது குலவிளக்கு திருமதி சுப்பிரமணியம் ஐயா அன்னபூரணம் அவர்கள் 16–05–2005 திங்கட்கிழமை அன்று ஒளியிழந்து அணைந்த பொழுது துன்புற்று நாம் தவிக்கையிலே, எம் துன்பச் செய்தி கேட்டு இறுதிக் கிரியைகளில் நேரில் கலந்துகொண்டோருக்கும் உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசி மூலம் ஆறுதல்கள் கூறி, அனுதாபத்தைப் பகிர்ந்து கொண்டோருக்கும், மரணக் கிரியைகளையும், சபிண்டீகரணக் கிரியைகளையும் நடாத்தி வைத்த குருமார்களுக்கும், எமக்குச் சகல வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும், மேலும் இன்று நடைபெறும் சபிண்டீகரண நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்த அனைவருக்கும் எமது உளங் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் லண்டன், கனடா, பிரான்ஸ் பிள்ளைகளின் இல்லத்தில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டு துக்கத்தில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைக் கூறுகின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்,
வழக்கம்பரை,
சுழிபுரம்.

இங்ஙனம்
பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்
அது வேறொருவருடையதாகும்.



"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்."

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.**

பாரதி பதிப்பகம், 430,காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல : 021 222 3081